**தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்**
**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு**
**வெற்றிடங்கள்**

1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற நிறுவனமாக காணப்படுகின்ற அதேவேளையில், ஒவ்வொரு வழிச்செலுத்துகைக்குப் பின்னாலும் ஆரோக்கியமான சாரதி ஒருவரை அமர்த்துதல் எமது நோக்கமாகும்.
போக்குவரத்து மருத்துவ துறையின் முன்னோடி என்ற வகையில், எமது நிறுவனம் மேற்குறிப்பிட்ட நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு தொழில் வல்லுநர்களின் பங்களிப்பு தேவையாக இருக்கின்ற படியினால் பின்வரும் வெற்றிடமாகியுள்ள பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**மருத்துவ ஏவலாளர், ஆய்வுகூட உதவியாளர், அலுவலக உதவியாளர், மற்றும் அலுவலகப் பணி உதவியாளர்**

## 1. மருத்துவ ஏவலாளர் - PL 2 – வெற்றிடங்களின் எண்ணிக்கை – 04

**தகைமைகள்**

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

1. பதவியின் பணிகள் தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கைத்தொழில் தொழிற் பயிற்சி நிறுவனமொன்றில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தகைமை (NVQ) இரண்டாவது (2) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

2. கல்வி பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் மூன்று (03) திறமை சித்திகளை கொண்டதாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

உள்வாரியான விண்ணப்பதாரர்கள் (பின்வரும் தகைமைகளில் இலக்கம் I அல்லது II அல்லது III)

I. தொடர்புடைய துறையில் ஐந்து (05) வருட அனுபவம் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து/ தொழிற்பயிற்சி நிறுவனமொன்றிலிருந்து தொடர்புடைய பதவியின் பொறுப்புக்களுக்கு இணங்கியதாக தொழிற் பரிசோதனையொன்றின் (Trade Test) போது உறுதிப்படுத்தப்படுகின்ற தேசிய தொழிற் தகைமை (NVQ) இரண்டாவது (02) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சியைக் கொண்டதாக ஆரம்பத் தேர்ச்சியல்லாத (PL I) சேவைக் வகுதியிலுள்ள ஊழியர்கள்.
II. ஒவ்வொரு பதவியின் பொறுப்புக்களுக்கும் உரியதாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழிற் தகைமை (NVQ) இரண்டாவது (02) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.
III. கல்வி பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் மூன்று (03) திறமை சித்திகளை கொண்டதாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

- வயது: 18 வயதிற்கு குறையாதவராக இருக்க வேண்டிய அதேவேளையில் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரியான விண்ணப்பதாரர்களுக்கான உயர்ந்தபட்ச வயது எல்லை ஏற்புடையதாகாது.

- சேவை வகுதிக்குரிய சம்பள குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :-

| | |
|---|---|
| சம்பள அளவுத்திட்டம்<br><br>2025.03.25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல.: 01/2025 இன் II ஆவது அட்டவணையின்படி சம்பளக் கொடுப்பனவு மற்றும் பதவிக்கு உரித்தான ஏனைய கொடுப்பனவுகளும் உரித்தாகும். | PL 2<br>ரூபா 42,300-10×490-10×540- 10×590- 12×630-66,060 |

(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல.: 01/2025 இன்படி இந்தச் சம்பளம் 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ஏற்புடையதாகும். 2025.04.01 ஆம் திகதியிலிருந்து செலுத்தப்படும் சம்பளம் ரூபா 37,715 ஆகும்.

## 2. இரசாயணகூட உதவியாளர் – PL 1 – வெற்றிடங்களின் எண்ணிக்கை – 02
## 3. அலுவலக உதவியாளர் – PL 1 – வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01
## 4. அலுவலகப் பணி உதவியாளர் – PL 1 – வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. கல்வி பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் மற்றும் குறைந்தபட்சம் 02 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

- வயது: 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

- சேவை வகுதிக்குரிய சம்பள குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :-

| | |
|---|---|
| சம்பள அளவுத்திட்டம்<br><br>2025.03.25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல.: 01/2025 இன் II ஆவது அட்டவணையின்படி சம்பளக் கொடுப்பனவு மற்றும் பதவிக்கு உரித்தான ஏனைய கொடுப்பனவுகளும் உரித்தாகும். | PL 1<br>ரூபா 40,500-10×450-10×490- 7×540- 15×590-62,530 |

(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல.: 01/2025 இன்படி இந்தச் சம்பளம் 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ஏற்புடையதாகும். 2025.04.01 ஆம் திகதியிலிருந்து செலுத்தப்படும் சம்பளம் ரூபா 36.475 ஆகும்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்குத் தேவையான பொதுவான தகைமைகள்:-

சகல விண்ணப்பதாரர்களும்

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. பதவிக்காக ஒப்படைக்கின்ற பணிகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கும் அதேபோன்று நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதியினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

iii. சிறந்த நடத்தையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

தகைமையுள்ளவர்களைத் தெரிவுசெய்வது சம்பந்தமான இறுதித் தீர்மானம் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தைச் சார்ந்ததாகும்.
சகல சுய விபரத் தகவல்களையும் உள்ளடக்கியதாக விண்ணப்பங்களைத் தயாரித்து தொடர்புடைய சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் உறவினரல்லாத இருவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைக் கொண்டதாக பின்வரும் முகவரிக்கு 2026.05.09 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பிக்கின்ற பதவியையும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும்.


தலைவர்
தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்
இல. 170, ஹய்லெவல் வீதி,
நுகேகொடை.
தொலைபேசி:- **011 2852868**